**ஊடக அறிக்கை: 2009 ஆம் ஆண்டு போரில் பங்காற்றியமைக்காக ஐநாவினால் திருப்பி அனுப்பபடும் இலங்கை அமைதிப் படையதிகாரி.**

**20 ஒக்டோபர் 2018**

**ஜோகானாஸ்பேர்க்:** இலங்கையில் நடைபெற்ற இனப்போரின் போது போர் குற்றங்களில் பங்குவகித்ததாக கூறப்படும் ஒரு அமைதிகாக்கும் படையதிகாரியை நாட்டுக்கு மீள அழைக்குமாறு இலங்கை அரசாங்கத்தை முதல்முறையாக ஐக்கிய நாடுகள் சபை கேட்டுள்ளது. 'அண்மையில் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில்' லெப் கேணல் கலன பி.எல் அமுனுபுர என்பவரை மாலியை விட்டுச் செல்வதற்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டதாக ஐ.நாவின் பேச்சாளர் ஒருவர் வெள்ளிக்கிழமையன்று அறிவித்தார்.

'இந்த வருடம் யூன் மாதத்தில் அமைதிகாக்கும் நடவடிக்கைகளுக்கான திணைக்களத்திற்கு நாங்கள் அமுனுபுர பற்றி வழங்கிய தகவல்க் கோவையை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்' என சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

'எத்தனை ஆயிரம் மக்கள் 2009 ஆம் ஆண்டுப் போரின் போது இறந்தார்கள் என்று எங்களுக்கு இன்னமும் தெரியாது அத்துடன் ஒருவர் கூட இதற்கான பதில் சொல்லும் பொறுப்பைக் கொண்டிருக்கவில்லை - இது போன்ற சிறிய நடவடிக்கை தமக்கு ஒரு நாளைக்கு நீதி கிடைக்கும் என்ற சிறிய நம்பிக்கையை உயிர் பிழைத்தவர்களுக்கு கொடுக்கும். இந்த நடவடிக்கையானது போர்க் குற்றவாளிகள் எனக் கூறப்படுபவர்களுக்கு இனிமேலும் ஐ நாவில் செல்வாக்கான பணிகள் வழங்கப்படமாட்டாது அத்துடன் எதிர்காலத்தில் அவர்கள் கடுமையாக வடிகட்டலில் இருந்தும் தப்ப முடியாது என்ற இறுக்கமான ஒரு செய்தியை இலங்கைக்கு அனுப்பும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை' என்று சூக்கா மேலும் தெரிவித்தார்.

2009 இல் இலங்கையில் சிவில் யுத்தம் இடம்பெற்ற இறுதிக் காலப் பகுதியில் அமுனுபுர 58 ஆவது படைப்பிரிவின் கீழ் இயங்கிய இலங்கை இராணுவத்தின் 11 ஆவது இலகு காலாற்படையின் இரண்டாவது கொமாண்டராக இருந்தார். 2015 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஐ.நாவின் விசாரணையானது வைத்தியசாலைகள் மற்றும் ஐ.நாவின் இடங்கள் மீது திரும்பத் திரும்ப எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமை மற்றும் சரணடைந்தவர்களை கொலை செய்தமை மற்றும் சித்திரவதைக்கு உள்ளாக்கியமை போன்றவற்றில் 58 ஆவது படைப்பிரிவு சம்பந்தப்படுள்ளமையை உறுதிப்படுத்துவதற்கான போதிய ஆதாரங்களை கண்டுபிடித்துள்ளது.

---

1 **Sri Lanka: The largest hostage rescue mission in the world launched, 10 April 2009, Government report at https://reliefweb.int/report/sri-lanka/sri-lanka-largest-hostage-rescue-mission-world-launched**

அமுனுபுரவின் அணியானது 2009 இல் புதுக்குடியிருப்பு சந்தி மற்றும் மார்ச் 2009 இல் புதுமாத்தளன் பகுதிகளில் நடாத்தப்பட்ட தாக்குதல்களில் சம்பந்தப்பட்டுள்ளதாக அரசாங்க அறிக்கைகள்[1] உட்பட சமகால வட்டாரங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த இரண்டு தாக்குதல்களிலும் பொதுமக்களுக்கு பாரிய இழப்புக்கள் ஏற்பட்டன. உக்கிரமான எறிகணைத் தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கிச் சூடுகள் காரணமாக இறந்தவர்களையும் இறந்து கொண்டிருந்தவர்களையும் புதுமாத்தளனில் இருந்த வைத்தியர்களினால் சென்றடைய முடியவில்லை என ஐ நாவின் அறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ளது. அந்த நேரத்தில் கண்டபடி பகிரங்க அறிக்கைகளை வெளியிடாத சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கூட புதுமாத்தளன் தற்காலிக வைத்தியசாலைக்கு அருகில் மக்கள் நெருக்கமாக இருந்த பகுதிகள் மீது நடாத்தப்பட்ட இராணுவத் தாக்குதல்களின் விளைவை 'ஒருவகையான பேரழிவைத் தவிர வேறொன்றுமில்லை'[2] எனக் கூறியிருந்தது.

டிசெம்பர் 2017 இல் மாலிக்கான இலங்கை அணியின் கொமாண்டராக அமுனுபுர அனுப்பப்பட்டார். அவர் இவ்வாறு புறப்பட்டுச் சென்ற போது நடாத்தப்பட்ட நிகழ்வின் போது இராணுவத் தளபதி இந்த ஐ.நாவின் பணியானது இராணுவ சாதனையின்[3] சர்வதேச அங்கிகாரம் என விபரித்திருந்தார்.

'2009 ஆம் ஆண்டு நடந்து கொண்டமுறையில் இருந்து தப்பித்துவிட்டதாக பாசாங்கு செய்வதற்கு தொடர்ந்தும் அமைதிகாக்கும் பணியை பயன்படுத்திக் கொள்ள இலங்கையை அனுமதிக்ககூடாது. மூன்று வருடங்களுக்கு முன்னர் ஜெனிவாவில் மனித உரிமைகள் சபையில் இந்த நாடானது வேறு பல விடயங்களுடன் கலப்பு நீதி மன்றத்தை உருவாக்குவதாகவும் அத்துடன் பொது மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளை வடிகட்டுவதாகவும் உறுதியளித்து ஒரு தீர்மானத்திற்கு வேறு நாடுகளுடன் சேர்ந்து ஆதரவளித்திருந்தது. இந்த வாக்குறுதிகள் மதிக்கப்படவில்லை' என சூக்கா தெரிவித்தார்.

'2009 இல் அமுனுபுரவின் கட்டளையிடும் அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தற்போது இலங்கை இராணுவத்தின் உதவி ஜெனரலாக இருப்பது முற்றிலும் ஏற்றுக் கொள்ளமுடியாதது. இது மிகவும் பெயர்போன போற்குற்றவாளிகள் எனக் கூறப்படுபவர்களில் ஒருவர் இராணுவத்தின் மனித உரிமைகள் தொடர்பான நிறைவேற்று அலுவகத்தை மேற்பார்வை செய்வராகவும் மற்றும் வெளிநாடுகளில் அமைதிப்படையினராக இருப்பவர்களால் ஏதாவது மீறல்கள் இடம்பெற்றால் அதனை விசாரணை செய்யும் அதிகாரியாக இருப்பதையும் குறிக்கின்றது. இதனை விட, 2009 ஆம் ஆண்டு போரின் போது கொமாண்டர்களாக இருந்தவர்கள் இலங்கை சமாதான ஆதரவு பயிற்சி நடவடிக்கைகளுக்கான பயிற்சி (IPSOTSL) உட்பட இளந்தலைமுறையினைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு பயிற்சிகளை வழங்கி வருகின்றார்கள். இது மறுசீரமைப்புத் தொடர்பான சரியான செய்தியை அனுப்பமாட்டாது'.

மனித உரிமைகள் தொடர்பான வடிகட்டல்கள் பூர்த்தி செய்யப்படாமல் லெபனானிற்கு அமைதிகாக்கும் படையினரை அனுப்புவதற்கு இலங்கை இராணுவம் முயற்சி செய்த பின்னர் இந்த வருடம் பெப்ரவரி மாதம் இலங்கைப் படையினரை அமைதிகாக்கும் பணியில் ஈடுபடுத்தும் நடவடிக்கைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டன. இந்த அமைதிப்பணி நடவடிக்கைகள் மீண்டும் டிசெம்பர் 2018 இல் ஆரம்பமாகும் என இராணுவம் அறிவித்திருக்கின்றது.

2004 தொடக்கம் 2007[5] வரையான மூன்று வருட காலப் பகுதியில் இலங்கை அமைதி காக்கும் படையினர் திட்டமிட்ட ரீதியில் சிறுவர் பாலியல் துஸ்பிரயோகங்களில் ஈடுபட்டதாக ஐ நாவின் விசாரணை ஒன்று குற்றஞ்சாட்டிய பின்னர் 134 இலங்கை அமைதிகாக்கும் படையினர் கெயிட்டியில் இருந்து 2007 ஆம் ஆண்டு திருப்பி அனுப்பபபட்டார்கள். 2004 ஆம்

ஆண்டு ஐ.நா அமைதிகாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த முதலாவது படையணியில் அமுனுபுரவும் இடம்பெற்றிருந்தார். பாலியல் துஸ்பிரயோகம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிராக எவ்வாறான ஒழுக்காற்று நடவடிக்கைகளை தாம் மேற்கொண்டது பற்றி இலங்கை அரசாங்கம் இன்று வரை முன்னுக்குப் பின் முரணான தகவல்களையே வழங்கி வருகின்றது. ஆனால் மோசமான இந்தக் குற்றத்தைச் செய்தமைக்காக எவரும் சிறையில் அடைக்கப்படவில்லை. 2016 ஆம் ஆண்டு சித்திரவதைக்கு எதிரான ஐ நாவின் குழுவானது திருப்பி அனுப்பப்பட்ட அமைதிகாக்கும் படையினர் எவ்வாறு தண்டிக்கப்பட்டார்கள் என்ற விபரத்தைக் கேட்டிருந்தது அத்துடன் இரண்டு வருடங்கள் கடந்தும்[7] இந்த தகவல் இன்னமும் வழங்கப்படவில்லை.

---

**2 A/HRC/30/CRP.2, Para 848.**
**3 'UN assignment in Mali endorses SL Army's international capabilities', 22 Dec 2017, Daily News, http://www.dailynews.lk/2017/12/22/local/138037/un-assignment-mali-endorses-sl-army's-internationalcapabilities**
**4 PRESS RELEASE: SRI LANKA FLOUTS UN COMMITMENTS BY APPOINTING ALLEGED WAR CRIMINAL TO ADMINISTER ARMY http://www.itjpsl.com/assets/press/31-March-2017-ITJP-PRESS-RELEASE-3.pdf**
**5 See ITJP & JDS Lanka joint dossier at http://www.itjpsl.com/assets/press/haiti-FINAL.pdf**
**6 Press Statement: Haiti: More than a decade and still hiding http://www.itjpsl.com/assets/press/Press-Statement-haiti-f.pdf**
**7 UNCAT letter 20 August 2018.**